# பணவீக்கம் 2 விழுக்காடாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது



கோலாலம்பூர், செப். 23-
கடந்த ஆகஸ்டு மாதம் வரை நாட்டின் பணவீக்கம் 2 விழுக்காடாகவே இருந்து வருவதாக நாட்டின் புள்ளி விவரத்துறை கூறியது. கடந்த மாதம் நாட்டின் பயனீட்டாளர் விலைக் குறியீடு 130.8 ஆக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அது 128.2ஆக இருந்தது எனவும் அது கூறியது.

இதற்கு உணவகம், ஹோட்டல்கள் 4.7 விழுக்காடாகவும் உணவு, பானம் 4.1 விழுக்காடாகவும் சேவை, சுகாதாரம் உட்பட இதர பொருட்கள் 2.4 விழுக்காடாகவும் உயர்வு கண்டதும் காரணமாகும் என அவர் கூறினார்.

உணவும் பானமும் பயனீட்டாளர் விலைக் குறியீட்டிற்கு 29.5 விழுக்காடு பங்களித்துள்ளது. இது கடந்த ஜூலை மாதம் 4.4 விழுக்காடாகவும் ஆகஸ்டு மாதம் 4.1 விழுக்காடாகவும் இருந்ததாக புள்ளி விவர இலாகா கூறியது.

இதனிடையே வெளியே மக்கள் சாப்பிடுவது மீதான பணவீக்கம் முந்தைய மாதத்தில் 6.2 விழுக்காடாக இருந்த வேளையில் அது கடந்த மாதம் 5.9 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

இதற்கு இறைச்சிகள் 5.8 விழுக்காடும் அரிசி, ரொட்டி 4 விழுக்காடும் மாவு, முட்டை 4 விழுக்காடும் பங்களித்துள்ளதாக அது கூறியது.

இதனிடையே கோழியின் பயன்பாடு கடந்த ஜூலை மாதம் 4.3 விழுக்காடாக இருந்த வேளையில் அது கடந்த மாதம் 5.7 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் கோழியின் விலை கிலோவுக்கு 10 ரிங்கிட் 51 காசாக இருந்த வேளையில் அது கடந்த மாதம் 10 ரிங்கிட் 21 காசாகக் குறைந்துள்ளது.